முருகப்பெருமான் துணை

**மகான் அழுகண்ணிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.12.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. வானவர்கள் போற்றும் அரங்கனே
வள்ளலே வாழும் ஞானியே
தானதரும சக்தி பெருக்கிடும்
தவசியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அருளுவேன் துல்லிய ஆசி
வரங்களென சோபகிருது சிலை திங்கள்
வல்லமைபட அட்டம திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 08 ம் நாள், 24.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் அழுகண்ணிச்சித்தர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமிலா ஞானிகள் பூசை
சுத்தநெறி கொண்டு அருளும்
4. அருளும் அரங்கன் வழி
ஆபத்தை வெல்லும் ஞானவழி
இருளும் அல்லலும் போக்கியே
எல்லா வல்லமையும் தரும் ஞானவழி
5. வழிதனை ஏற்று வருக
வையகத்தில் சன்மார்க்கவாதிகள் எனும்
தெளிவு கூடி ஞானிகள் படை
தேசமெங்கும் அரங்கன் படைகளாக
6. ஆகவே ஆற்றல் பெருகி
அகிலமதில் ஞானிகள் வெளிப்பாடு
மிகையாகி எங்கும் மாற்றம்
மேலவர்கள் தலைமை உருவாகி

7. உருவாகி உண்மை நிலையும்
உறுதிமிக்க தருமநெறியும்
குருபக்தி நீதிநெறி மாறா
கூறிடுவேன் ஞானத் தலைமைகள்

8. தலைமைகள் நிரம்ப இனிதே
தரணி முழுமை ஞான ஆட்சி
களங்கமற அமைந்து நன்கு
கலியுகம் ஞானயுகம் ஆகும்

9. ஆகவே ஞானி அரங்கனின்
ஆற்றல்மிக்க சேவைகள்
வகையான வரையறையாகி
வல்லமை கொண்ட துணையுமாகி

10. ஆகியே மக்களிடை மாற்றம் தரும்
ஆறுமுகனாரை வணங்கி வருகவே
அகிலம் ஆறுமுகன் அருள் செய்யும்
ஆற்றல்மிக்க ஞான பூமியாகி

11. ஆகியே இயற்கை வளமுடன்
அழிவிலா பாதுகாப்புடன் இனிதே
அகிலம் எல்லாவளமும் காணும்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—